**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.66/2025 - PW-1**

| | |
|---|---|
| Name | திரு. விஜய கணபதி |
| Husband/Father Name | ராமன் |
| Village /Area | நெல்வாய் |
| Taluk | நெமிலி |
| Occupation | ஓட்டுநர் |
| Age | 24 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.10.2025.

**(எதிரிகள் ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். கடந்த 16.01.2025 அன்று மாலை 05.15 மணிக்கு நானும் தமிழரசன் என்பவரும் கிரிக்கெட் விளையாடி விட்டு பாலத்தின் மீது அமர்ந்து பேசிக்கொண்டிருந்தோம். அப்போது எங்கள் ஊரை சேர்ந்த சங்கர் மற்றும் மணிகண்டன் என்பவர்கள் இருச்சக்கர வானத்தில் அங்கு வந்தார்கள். நாங்கள் நால்வரும் அங்கு பேசிக்கொண்டிருந்தோம். பிறகு பிரேம்குமார் மற்றும் அவருடன் 2 கூட்டாளிகள் இரு சக்கர வாகனத்தில் அங்கு வந்தார்கள்.

பிரேம்குமார் என்பவர் தமிழரசனை பார்த்து நீ தான்டா என்னை வழி மடக்கினாய் ங்கோத்தா தெவிடியா பைய்யா என்று அசிங்கமாக திட்டி காலால் எட்டி உதைத்தார் அதை தடுக்க சென்ற என்னை என் முகத்தின் மீது கையால் அடித்தார். பிறகு மாறி மாறி

ஒருவருக்கொருவர் தள்ளிக் கொண்டும் சங்கர் என்பவர் வைத்திருந்த பெட்ரோலை பிடிங்கி தமிழரசன் மீது ஊற்றினார் அது என் மீதும் பட்டது. பிரேம்குமார் என்பவர் தன் சட்டை பாக்கெட்டில் வைத்திருந்த தீப்பெட்டியை எடுத்து ங்கோத்தா தெவிடியா பசங்களா சாவுங்கடா என்று திட்டி கொளுத்தி போட்டு விட்டு அங்கிருந்து இரு சக்கர வாகனத்தில் சென்று விட்டார்.

பிறகு பாண்டியன் மற்றும் கோகிலா என்பவர்கள் தீப்பற்றி எரிந்த எங்களை அணைத்து 108 ஆம்புலன்சில் காஞ்சிபுரம் அரசு மருத்துவமனைக்கு சுரேஷ் என்பவர் அழைத்து சென்றார்.

பிறகு காஞ்சிபுரம் மருத்துவமனையில் இருந்து என்னை போலீசார் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தனர். பிறகு மேல் சிகிச்சைக்காக சென்னை கே.எம்.சி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் வாக்குமூலம் காஞ்சிபுரம் அரசு மருத்துமனையில் என்னிடம் பெறப்பட்டவை தான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் வாக்குமூலம் **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

நாங்கள் மேல் சிகிச்சைக்காக கே.எம்.சி மருத்துவமனையில் இருந்த போது நீதிபதி எங்களிடம் வாக்குமூலம் பெற்றார். சாட்சி தனக்கு தீக்காயத்தால் முதுகில் ஏற்பட்ட காயத்தின் தழும்பை நீதிமன்றத்தில் காண்பித்தார். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

என்னிடம் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் வாட்டர் கேனில் உள்ள பெட்ரோலால் தான் எதிரி பிரேம்குமார் சங்கரிடமிருந்து பிடிங்கி தமிழரசன் மீது ஊற்றிய வாட்டர் பாட்டில் ஆகும். அது **சா.பொ. 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

சம்பவ தினத்தன்று எங்கள் ஊரில் விஷேஷம் ஏதாவது நடைபெற்றதா என்றால் அன்று காணும் பொங்கல். திருமால்பூரில் விளையாட்டு போட்டி ஏதாவது நடந்ததா என்றால் நடந்தது. சம்பவ இடத்திற்கும் விளையாட்டு போட்டி நடந்த இடத்திற்கும் இடைப்பட்ட தொலைவு சுமார் 300 மீட்டர். சம்பவ இடத்திலும் விளையாட்டு போட்டி நடந்த இடத்திலும் பொதுமக்கள் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான்.

நாங்கள் சங்கரும் மணிகண்டனும் பேசிக்கொண்டிருந்த போது சங்கரும், மணிகண்டனும் சம்பவ இடத்திற்கு வந்த நேரம் சரியாக ஞாபகம் இல்லை. தமிழரசனுக்கும் பிரேம்குமாருக்கும் சம்பவ தினத்திற்கு முன்நாள் ஒரு தகராறு நடந்து பற்றி எனக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். அதனால் நான் தமிழரசனுடன் சேர்ந்துகொண்டு பிரேம்குமாரை பழித்தீர்க்க வேண்டு என்று பேசிக்கொண்டிருந்தேன் என்று சொன்னால் சரியல்ல.

பிரேம் குமார் சம்பவ இடத்திற்கு எந்த வாகனத்தில் வந்தார் என்ற விவரத்தை போலீஸ் விசாரணையில் நான் கூறிவில்லை என்று சொன்னால் சரிதான். நான் முன்னால் அமர்ந்து பேசிக்கொண்டிருந்ததால் பின்னால் வந்தால் அதனால் நான் சொல்லவில்லை. மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்காக அனுமதித்த போது மருத்துவரிடம் எனக்கு காயம் யாரால் ஏற்பட்டது என்ற விவரத்தை நான் கூறினேனா என்றால் கூறினேன் பெயர்களையும் கூறினேன்.

எனக்கு காஞ்சிபுரத்தில் முதல் சிகிச்சை அளித்து சிறிது நேரத்திற்கெல்லாம் மயக்கம் ஆகிவிட்டேன் விழித்து பார்த்த போது நான்

சென்னை கே.எம்.சி யில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தேன். எனக்கு மயக்கம் என்று தெளிந்தது என்றால் சம்பவ தினத்தன்று இரவே தெளிந்தது.

என்னை காஞ்சிபுரம் மருத்துவமனையில் யார் யார் விசாரித்தார்கள் என்றால் போலீசார் விசாரித்தார்கள். என்னை விசாரித்த போலீசார் எந்த காவல் நிலையத்தை சேர்ந்தவர் என்றால் நெமிலி காவல் நிலையத்தை சேர்ந்தவர். மறுநாள் என்னை நீதிபதி வந்து விசாரித்தார்.

பிரேம்குமாருக்கும் தமிழரசனுக்கும் இடைய இருந்த முன்விரோதத்தின் காரணமாக பிரேம் குமாரை எப்படியாவது பழிதீர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் நானும் சங்கரும் மணிகண்டனும் தமிழரசனும் சேர்ந்து சங்கரை பெட்ரோல் வாங்கிவர சொன்னோம் என்று சொன்னால் சரியல்ல. சங்கர் வாங்கி வந்த பெட்ரோல் பாட்டிலில் எவ்வளவு பெட்ரோல் இருந்தது என்றும் எதற்காக வாங்கி வந்தார் என்று என்னிடம் கூறினாரா என்றால் பைக்கில் பெட்ரோல் தீர்ந்து விட்டதால் வாங்கிவந்தார். அரை லிட்டர் பெட்ரோல் தான் வாங்கிவந்தார்.

நான் கூறிய விவரம் அனைத்தும் உண்மைக்கு புறம்பானது என்று சொன்னால் சரியல்ல. பிரேம் குமாரை தீவைத்து கொளுத்த திட்டமிட்டு அதில் பிரேம்குமார் இரு சக்கர வானத்தில் செல்வதை பார்த்து சங்கர் பிரேம்குமாரின் மீது ஊற்ற முயற்சித்த போது அது தமிழரசன் மீதும் என் மீதும் தவறுதலாக பட்டுவிட்டது என்று சொன்னால் சரியலல். சங்கர் எங்கள் மீது ஊற்றவில்லை பிரேம்குமார் தான் என் மீதும் தமிழரசன் மீதும் பெட்ரோலை ஊற்றினார். தமிழரசன் மீது ஊற்றிய பெட்ரோல் தான் என் மீதும் பட்டது.

நாங்கள் அவ்வாறு தீய சம்பவத்தை செய்ய முற்பட்டது

ஊருக்கு தெரிய வந்தால் அது ஜாதி கலவரமாக மாறிவிடும் என்பதால் நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் முழுவதுமாக சிகிச்சை பெற்றது காஞ்சிபுரம் மருத்துவமனையில் தான் என்று சொன்னால் சரியல்ல. என்னை காஞ்சிபுரம் மருத்துவமனையில் தான் போலீசார் வந்து விசாரித்தார்கள் என்று சொன்னால் சரிதான் அங்கும் என்னை விசாரித்தார்கள். கே.எம்.சி மருத்துவமனையிலும் நீதிபதி விசாரிக்கும் முன்பு போலீசார் விசாரித்தார்கள்.

நீதிபதி என்னை விசாரிக்கும் போது எத்தனை மணி என்றால் அது குறித்து எனக்கு ஞாபகம் இல்லை அதே போல் காவல் துறையினரும் எப்போது விசாரித்தார்கள் என்று எனக்கு நேரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் கூறுவது தவறு என்னும் நான் நாங்கள் செய்த சதித்திட்டம் வெளியே தெரியக்கூடாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**எதிரிகள் 2 முதல் 5 தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

சம்பவம் 16.01.2025 அன்று நடைபெற்றது அன்று காணும் பொங்கல் என்று சொன்னால் சரிதான். அன்று பள்ளி மற்றும் அரசு அலுவலகங்கள் அனைத்தும் விடுமுறை என்று சொன்னால் சரிதான். திருமால்பூர் பெரிய ஊர் என்றும் அதில் கிட்டத்தட்ட 3000 நபர்கள் வசிப்பார்கள் என்று சொன்னால் சரிதான்.

திருமால்பூரில் வீரக சீரக என்ற பெயரில் ஒரு நதி ஓடுகிறது என்று சொன்னால் சரிதான். போலீசார் என்னை விசாரித்து வாக்குமூலம் பெற்றார்கள் என்று சொன்னால் சரிதான். போலீஸ் விசாரணையில் வீரக சீரக நதியின் பெயரில் ஒரு பாலம் உள்ளது என்று கூறினேனா என்றால் கூறினேன்.

வீரக சீரக நதி எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி செல்கிறது என்றால் தெற்கில் இருந்து வடக்கு நோக்கி செல்கிறது. அதன் மீதுள்ள பாலம் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி கட்டப்பட்டுள்ளது. அந்த பாலத்திற்கு பக்கத்தில் கிழக்கு திசையில் 20 அடி தொலைவில் திருமால்பூர் அரசு பள்ளி உள்ளது என்று சொன்னால் சரிதான்.

அந்த பாலத்திற்கு 30 – 40 அடி தொலைவு தள்ளி தெற்கே ஒரு ஆலமரம் உள்ளதா என்றால் அதை தள்ளி ஆலமரம் உள்ளது. 100 மீட்டர் தள்ளி அந்த ஆலமரம் உள்ளது. நான் கூறுவது தவறு என்றும் அந்த பாலத்திற்கு 30 – 40 மீட்டர் தொலைவில் தான் ஆலமரம் உள்ளது. திருமால்பூரில் காணும் பொங்கல் அன்று விளையாட்டு போட்டிகள் காலை 09.00 முதல் இரவு 09.00 மணி வரை அந்த ஆலமரத்திற்கு அருகில் நடைபெற்றது என்று சொன்னால் நடந்தது உண்மை தான்.

பள்ளூரில் இருந்து திருமால்பூர் வழியாக பனப்பாக்கம் செல்கின்ற தார் சாலை எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி செல்கிறது என்று சொன்னால் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி செல்கிறது.

திருமால்பூரில் இருந்து நெல்வாய் வழியாக நெமிலி செல்லும் தார் சாலை எந்த திசையில் இருந்து எந்த திசையை நோக்கி செல்கிறது என்று சொன்னால் கிழக்கில் இருந்து மேற்கு நோக்கி செல்கிறது. நானும் இறந்துவிட்டதாக கூறும் தமிழரசன், மணிகண்டன், நவீன், வெங்கடேசன், பிரேம் குமார் ஆகியோர்கள் சிறு வயதில் இருந்தே நண்பர்கள் என்று சொன்னால் சரியல்ல.

இறந்துவிட்டதாக கூறும் தமிழரசனும் சதிஷ் (எ) ஜிட்டும் சிறு

வயது முதல் ஒன்றாக படித்தவர்கள் என்று சொன்னால் சரியல்ல. தமிழரசன் சதிஷ்ஷிற்கு இளையவர் சதிஷ் பள்ளில் தமிழசரனுக்கு சீனியர். நானும் சதிஷீம் நெருங்கிய நண்பர்கள் என்று சொன்னால் வாய்ப்பே இல்லை. நானும் தமிழரசனும் எந்த இடத்தில் பேசிக்கொண்டிருந்தோம் என்றால் பாலத்தின் ஓரமாக போடப்பட்டிருந்த கட்டையின் மீது பேசிக்கொண்டிருந்தோம்.

நானும் தமிழரசனும் பாலத்தின் மீது எந்த திசையை நோக்கி நின்று பேசிக்கொண்டிருந்தோம் என்றால் பாலத்தின் வடக்கு பக்கமாக நின்று பேசிக்கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் சங்கரும், மணிகண்டனும், கோகுலும் எந்த திசையில் இருந்து வந்தார்கள் என்றால் நெமிலியில் இருந்து நெல்வாய் செல்லும் வழியில் மேற்கில் இருந்து கிழக்காக மணிகண்டனும் சங்கரும் கோகுலை இறக்கி விட்டு வந்தார்கள்.

கோகுலை இறக்கிவிட்டு வந்த தகவலை சங்கர் தான் என்னிடம் கூறினார். கோகுல், சங்கர், மணிகண்டன், தமிழரசன் ஆகியோர்கள் நெல்வாய் கிராமத்தை சேர்ந்தவர்கள். சங்கர் கோகுலை நெல்வாய் கிராமத்தல் இறக்கி விட்டுவிட்டு தான் வந்தார் என்று சொன்னால் சரிதான்.

நான் போலீசார் வாக்குமூலத்தில் ஒரு லிட்டர் வாட்டர் பாட்டிலில் தான் சங்கர் பெட்ரோல் வாங்கி வந்ததாக கூறியுள்ளேனா என்றால் ஆமாம். விளையாட்டு போட்டி நடைபெற்ற ஆலமரத்தருகே மாலை நேரத்தில் பொதுமக்கள் 300 – 400 பேர் கூடியிருந்தார்களா என்றால் கூடியிருந்தார்கள். அன்றைய தினம் விடுமுறை என்பதால் பள்ளி கேட்கள் முடப்பட்டிருந்தது என்று சொன்னால் சரிதான். நாங்கள் அரசு பள்ளியின் கிரவுண்டில் தான் கிரிக்கெட் விளையாடினோம். அந்த

கிரவுண்ட் பள்ளியிள் உள் தான் உள்ளது. அந்த பள்ளி சுற்றி காம்ப்பவுண்டு போடப்பட்டுள்ளதா என்றால் ஆமாம்.

முதல் விசாரணையில் கூறிய சம்பவம் குறிப்பாக பாலத்தின் மீது நடந்தது. சம்பவ இடத்தில் யார் யார் இருந்தார்கள் என்றால் முதலில் நானும் தமிழரசன், சங்கர் மணிகண்டன், பிரேம்குமார் மற்றும் இந்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த எதிரிகள் இருந்தனர். அதன் பிறகு தமிழரசன் எரிவதை பார்த்து பொதுமக்கள் சம்பவ இடத்திற்கு ஓடி வந்தார்கள்.

சம்பவ நேரத்தில் நான் கூறுவது போல் 2 முதல் 5 எதிரிகள் சம்பவ இடத்தில் இல்லை என்றும் 1ம் எதிரி மட்டும் தான் அவருடைய இருசக்கர வானத்தில் அந்த வழியாக வந்தார் என்று சொன்னால் சரியல்ல. காஞ்சிபுரம் மருத்துவமனைக்கு செல்லும் போது நேரம் என்ன இருக்கும் என்றால் மாலை 06.00 முதல் 7.00 மணிக்குள் சென்றிருப்பேன்.

108 ஆம்புலன்சில் என்னுடன் மாமா சுரேஷ்குமார் மற்றும் தமிழரசன் மற்றும் அவருடை பாட்டி ஆகியோர்கள் சென்றோம். சம்பவ தினத்தன்று இரவே காஞ்சிபுரம் மருத்துவமனையில் எனக்கு முதலுதவி செய்து என்னையும் தமிழரசனையும் மேல் சிகிச்சைக்காக கே.எம்.சி மருத்துவனைக்கு அனுப்பிவைத்தார்கள். காஞ்சிபுரம் மருத்துவமனையில் இருந்து ஏற்பாடு செய்து 108 ஆம்புலன்சின் மூலம் சென்னை சென்றோம். முதலில் தமிழரசனை தனியாக ஒரு ஆம்புலன்சில் அனுப்பிவிட்டார்கள் அவருடன் யார் யார் சென்றார்கள் என்று எனக்கு தெரியாது. என்னை வேறொரு ஆம்புலன்சில் எனது அக்காவுடன் சென்னைக்கு சென்றோம். எனது அக்கா தமிழரசன் சென்னைக்கு சென்ற அரை மணி நேரம் கழித்து நாங்கள் சென்றதாக

சொன்னார்.

காஞ்சிபுரம் மருத்துவமனையில் இருந்து புறப்பட்ட நேரம் பற்றியும் சென்னை மருத்துவமனைக்கு சென்ற நேரம் பற்றியும் எனக்கு தெரியவில்லை. கே.எம்.சி மருத்துவமனையில் நான் உள்நோயாளியாக எத்தனை நாட்கள் சிகிச்சை பெற்றேன் என்றால் தெரியவில்லை. எனது மனைவிக்கு பிரசவம் என்பதால் வந்துவிட்டேன்.

காஞ்சிபுரம் மருத்துவமனையில் போலீசார் என்னை விசாரிக்கும் போது நேரம் மாலை 07.00 மணிக்கு மேல் இருக்கும். என்னை விசாரித்த போலீசாரின் பதவி பற்றி எனக்கு தெரியாது. ஆனால் போலீசார் தான் விசாரித்தார்கள். அப்போது தான் நான் முதன் முதலாக விசாரிக்க நடந்ததை கூறினேனா என்றால் ஆமாம். கிட்டதட்ட கால் மணி நேரம் அப்போது விசாரித்தார்கள்.

அப்போது போலீசார் என்னிடம் வெள்ளை தாளில் கையொப்பம் வாங்கினார்களா என்றால் ஆமாம். அதன் பிறகு என்னை மறுபடியும் போலிசார் கே.எம்.சி மருத்துவமனையில் பானாவரம் ஆய்வாளர் விசாரித்தார். அது எந்த தேதியில் எத்தனை மணிக்கு என்றால் 17.01.2025 அன்று விசாரித்தார்கள் ஆனால் நேரம் எனக்கு ஞாபகம் இல்லை. நான் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்ததால் நான் என்னை போலீசார் எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்று ஞாபகம் இல்லை.

ஆய்வாளர் கே.எம்.சி மருத்துவமனையில் என்னையும் தமிழரசனையும் விசாரித்தார் நானும் வாக்குமூலம் கொடுத்தேன் தமிழரசனும் வாக்குமூலம் கொடுத்தார். ஆய்வாளர் என்னை விசாரித்து பதிவு செய்த வாக்குமூலத்தில் கையொப்பம் பெற்றாரா என்றால்

பெற்றார். மேற்படி இரண்டு மருத்துவமனைகளிலும் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலங்களில் கையொப்பம் பெற்றார் என்று சொன்னால் சரிதான்.

கே.எம்.சி மருத்துவமனையில் சென்னையை சேர்ந்த நீதிபதி என்னையும் தமிழரசனையும் விசாரித்து வாக்குமூலம் பெற்ற தேதி என்று என்று கேட்டால் தேதி எனக்கு ஞாபகம் இல்லை. நேரமும் எனக்கு ஞாபகம் இல்லை. நீதிபதியிடம் நாங்கள் வாக்குமூலம் கொடுத்தது உண்மைதான்.

என்னை சென்னையை சேர்ந்த நீதிபதி விசாரித்த போது நான் நான் கொடுத்ததாக சொல்லும் வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரத்தை தான் போலீஸ் விசாரணையிலும் கூறினேனா என்றால் ஆமாம்.

சம்பவம் நடைபெற்ற 16.01.2025 ற்கு முந்நாள் 15.01.2025 அன்று சில பிரச்சனைகள் தமிழரசனுக்கும் பிரேமிற்கும் நடந்ததா என்றால் ஆமாம். 16.01.2025 அன்று மாலை 04.00 முதல் 04.30 மணிக்கு வீர சீரக நதி பாலத்திற்கு 2 – 3 கி.மீ தொலைவு கிழக்காக வயல்வெளியில் உட்கார்நதிருந்த வெங்கடேசன், மணிகண்டன், நவின், சதிஷ்குமார், பிரேம்குமாரை நான் சென்று அழைத்தேனா என்றால் இல்லை.

எனக்கும் தமிழரசனுக்கும் மது அருந்தும் பழக்கம் உண்டு. ஆனால் 16.01.2025 மாலை 04.30 மணிக்கு வீர சீரக நதி பாலத்திற்கு அருகே வயல் வெளியில் அமர்திருந்த ஆஜர் எதிரிகள் ஐவரையும் மது அருந்துவதற்காக அழைத்தேன் என்று சொன்னால் அவர்கள் யாரும் எனக்கு பழக்கமானவர்கள் இல்லை தெரியாது. நான் அழைத்த போது 1ம் எதிரி பிரேம் வர மறுத்துவட்டார் என்றும் அப்போது நான் அவரிடம் இந்தா சிகரெட்டை பிடி என்று கிகரெட்டை கொடுத்தேன் என்றால்

சரியல்ல.

சங்கர், கோகுல் பனப்பாக்கத்தில் இருந்து பெட்ரோல் வாங்கிவந்தார். பனப்பாக்தில் இருந்து பெட்ரேலலை வாங்கிவிட்டு திருமால்பூர் வந்து வீர சீரக நதியை தாண்டி நேராக நெல்வாய்க்கு சென்று கோகுலை விட்டுவிட்டு வந்தார்களா என்றால் ஆமாம். கோகுல், சங்கர் மற்றும் மணிகண்டன் வீடுகள் நெல்வாயில் உள்ளது என்று சொன்னால் சரிதான். கோகுலை விட்டுவிட்டு பிறகு சங்கரும் மணிகண்டனும் நாங்கள் பேசிக்கொண்டிருந்த வீர சீரக நதி பாலத்த்றகு வந்து எங்ளிடம் பபேசினார்கள் என்றால் சரிதான். நெல்வாய்க்கு சென்று கோகுலை விட்டு விட்டு வந்த போது சங்கரிடம் பெட்ரோல் பாட்டில் இருந்ததா என்றால் இருந்தது.

எந்த நோக்கத்திற்காக சங்கர் ஊருக்கு சென்று மீண்டும் பெட்ரோல் பாட்டிலை சம்பவ இடத்திற்கு எடுத்து வந்தார் என்று சொன்னால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஆலமரத்திற்கு பக்கத்தில் காந்தி, அண்ணாதுரை, டாக்டர் அம்பேத்கர் ஆகியோரார் சிலைகள் உள்து என்றால் சரிதான். வீரக சீரக நதி பாலத்திற்கு அருகில் நிறைய கடைகள் மற்றம் வீடுகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி சிலைகளுக்கு எதிர்தார் போல் நிறைய கடைகள் உள்ளது என்றால் சரிதான், அங்கு உள்ள ஒரு கடையில் பெட்ரோல் விற்கிறார்கள் என்று சொன்னால் சரிதான்.

போலீசை நிர்பந்தப்படுத்தி என்னால் போடப்பட்ட வழக்கு என்றும் சங்கர் தனது இரு சக்கர வானத்தில் பெட்ரேலை ஊற்றாமலும் வீட்டிலும் வைக்காமலும் திரும்ப சம்பவ இடத்திற்கு பெட்ரோல் பாட்டிலுடன் வந்து அந்த வழியாக வந்த பிரேமின் மீது சங்கர் தனது கையில் வைத்திருந்த பாட்டிலில் இருந்த பெட்ரோலை வீசிய போது

அது  தவறி தமிழரசன் மீதும் என் மீதும் பட்டது என்றும் அதே வேகத்தில் தீப்பெட்டியை கிழித்து போட்டதில் தவறி  தமிழரசன் மீதும் பக்கத்தில் இருந்த  என் மீது தீப்பற்றிக்கொண்டது என்று சொன்னால் அது பொய்.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.29 19:27:35 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.